செ.வெ.எண்: 61 /அக்டோபர்/ 2019 நாள்: 21.10.2019

**திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மாவட்ட அளவில் மாதாந்திர விளையாட்டுப் போட்டிகள் வாலிபால், கோ-கோ, நீச்சல் மற்றும் தடகளப் போட்டிகள் வருகின்ற 25.10.2019 அன்று அன்று அண்ணா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது. வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் கலந்து கொண்டு பயன்பெறுமாறு**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு, இ.ஆ.ப. அவர்கள் தகவல்**

-----------

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், 2019-2020 ஆம் ஆண்டிற்கு ஆகஸ்ட் மாதத்திற்கான மாதாந்திர விளையாட்டுப் போட்டிகளான வாலிபால், கோ-கோ, நீச்சல் மற்றும் தடகளப் போட்டிகள் 25.10.2019 அன்று திருச்சிராப்பள்ளி அண்ணா விளையாட்டரங்கில் காலை 8.30 மணியளவில் பின்வருமாறு நடைபெறவுள்ளது.

| | |
|---|---|
| குழு போட்டிகள் (ஆண்கள்/பெண்கள்): | வாலிபால், கோ-கோ |
| தடகளம் (ஆண்கள் / பெண்கள்) : | 100மீ, 400மீ, 1500மீ, குண்டு எறிதல், வட்டு எறிதல், உயரம் தாண்டுதல், நீளம் தாண்டுதல், |
| நீச்சல் (ஆண்கள் / பெண்கள்): | 50மீ, 100மீ, 200மீ, 400மீ ப்ரீ ஸ்டைல், 50மீ பேக் ஸ்ட்ரோக், 50மீ பிரஸ்ட் ஸ்ட்ரோக், 50மீ பட்டர்ப்பிளை ஸ்ட்ரோக் மற்றும் 200மீ இன்டிஜுவல் மிட்லெ |

போட்டி விதிமுறைகள்:

- **இப்போட்டியில் பங்கேற்கும் போட்டியாளர்கள் நுழைவுபடிவத்தை 25.10.2019 அன்று காலை 8.30 மணிக்கு மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் அலுவலகத்தில் சமர்ப்பிக்கவேண்டும்.**
- **இப்போட்டிகளில் கலந்துகொள்ள வயது வரம்பு கிடையாது.**
- தனிநபர் போட்டிகளில் ஒரு நபர் இரு போட்டிகளில் மட்டுமே கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.
- குழு போட்டிகளில் ஒரு நபர் ஒரு போட்டிகளில் மட்டுமே கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.
- வெற்றி பெறுபவர்களுக்கு பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

மேலும் விவரங்களுக்கு மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் அண்ணா விளையாட்டரங்கம் திருச்சிராப்பள்ளி தொலைபேசி எண். 0431-2420685 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**செய்தி வெளியீடு:**

21/10/2019

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**